ISSN: 2320-4842
Vol-18 No. 03 July-September 2024

# ‘பச்சையப்பனிலிருந்து ஒரு தமிழ் வணக்கம்’ - கவிதைத் தொகுப்பின் நோக்கும் போக்கும்’

**செ.வளர்மதி,**
முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர் (தமிழ்),
அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி (த),
சிவகாசி

**முனைவர் த.சந்திரகுமார்**
ஆய்வு நெறியாளர் (ம) தமிழ்த்துறை
உதவிப்பேராசிரியர்
அய்ய நாடார் ஜானகி அம்மாள்
கல்லூரி(த) சிவகாசி.

**முன்னுரை**

இலக்கியம் காலம் காட்டும் கண்ணாடியாகத் திகழ்கின்றது. அவ்வகையில் உருவாக்கப்படும் இலக்கியங்கள் கவிதை, சிறுகதை, நாடகம், கதை, நாவல் என்று பலவாறு வடிவம் பெறுகின்றன. சங்ககாலம் முதற்கொண்டு தற்காலம் வரையில் தனக்கான தலைமை இடத்தைத் தொடர்ந்து தக்கவைத்துக் கொண்ட இலக்கிய வடிவம் கவிதையாகும். அவ்வடிவங்களில் இயற்றப்பெறும் புதுக்கவிதைகளை எளிமையாக அனைவராலும் புரிந்து கொள்ள முடிகின்றது. புதுக்கவிதைகளில் எண்ணற்ற சமூக மறைப்புகள் வெளிச்சம் போட்டுக் காட்டப்படுகின்றது. மிகவும் உரத்த குரலுடன் ஓங்கி ஒலிக்கும் கவிதைகள் சமூகத்தின் வளர்ச்சிக்கும், உயர்விற்கும் துணைநிற்கின்றன. இவ்வகையில் கவிதையானது அனுபவத்தின் வெளிப்பாடு ஆகும். சிறந்த கவிதைகளைச் சமூதாயத்திற்கு வழங்கும் கவிஞர்களில் நா.முத்துக்குமாரும் குறிப்பிடத்தக்கவர் ஆவார். அவருடைய கவிதையின் நோக்கும் போக்கும் சமுதாயச் சிந்தனைகளை மையமிட்டு அமைந்துள்ளது என்பதை ஆய்ந்தறிவதாக இக்கட்டுரை அமைகின்றது.

**கவிஞர் நா.முத்துக்குமார் அறிமுகம்**

கவிஞர் நா.முத்துக்குமார் 1975இல் காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள கன்னிகாபுரம் எனும் ஊரில் பிறந்தார். காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரியில் இளங்கலை இயற்பியல் பட்டமும், சென்னை பச்சையப்பன் கல்லூரியில் முதுகலைத் தமிழ் இலக்கியப் பட்டமும் பெற்றார். இவரது வாழ்வினை கலை, கவிதை ஆகிய இரண்டிற்காகவும் அர்ப்பணித்தார்.

நியூட்டனின் மூன்றாம் விதி, குழந்தைகள் நிறைந்த வீடு, அணிலாடும் முன்றில், பால காண்டம், என்னைச் சந்திக்க கனவில் வராதே போன்ற பல நூல்களை நா.முத்துக்குமார் எழுதியுள்ளார். இவரது கவிதைகள் ஆங்கிலம், பிரெஞ்சு, மலையாளம் ஜெர்மன் ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. கஜினி, வெயில், அயன் ஆகிய திரைப்படப் பாடல்களுக்காகப் பிலிம்பேரின் சிறந்த பாடலாசிரியர் விருது பெற்றுள்ளார். தங்கமீன்கள் படத்தில் இடம்பெற்ற “ஆனந்த யாழை மீட்டுகிறாய்……..” என்ற பாடல் மற்றும் சைவம் படத்தில் இடம்பெற்றுள்ள “அழகே அழகு….” என்ற பாடல் இரண்டிற்காகவும் இரண்டுமுறை தேசிய விருது பெற்றுள்ளார்.

**சமுதாய எள்ளல்**

சமுதாயம் மக்களின் வாழ்வியல் நடைமுறைகள் அனைத்தையும் உள்ளடக்கியது எனலாம். அவ்வகையில் கவிஞர்கள் சமுதாயத்தின் மீது தங்களுக்கு ஏற்படும் கோபங்களைக் கூட கோபங்களாக வெளிப்படையாக வெளிக்காட்டாமல் அங்கதச் சுவையுடன் வெளிப்படுத்துகின்றனர். இன்றைய கல்வி முறை மாணவர்களின் மத்தியில் எவ்வளவு தூரம் பயத்தினை ஏற்படுத்தியுள்ளது என்பதனை,

**“வருத்தப்பட்டு**
**பாரஞ்சுமக்கிறவர்களே**

**என்னிடத்தில் வாருங்கள்**

**இளைப்பாறுதல் தருவேன்**

**ஆண்டவர் அழைத்தார்**

**பள்ளிக் குழந்தைகள்**

**புத்தக மூட்டையுடன் சென்றன" (ப.ஒ.த.வ. ப.32)**

என்ற புதுக்கவிதை விளக்குகின்றது. மகிழ்வுடனும் பெரு விருப்பத்துடனும் பள்ளிக்குச் செல்லும் மாணவர்களின் மனநிலை இன்று பெருமளவில் மாறியுள்ளது. புத்தக மூட்டை என்ற பெருஞ்சுமையில் இருந்து தங்களைக் காப்பாற்ற யாராவது வருவார்களா? என்று ஏங்கி நிற்கும் குழந்தைகளின் மனநிலையை சமுதாய எள்ளலுடன் பதிவுசெய்துள்ளதை இக்கவிதையில் காணமுடிகின்றது.

ரேசன் கடைகளில் கொடுக்கப்படும் அரிசிகளை வாங்குவதற்கு அலைமோதிக் கொண்டு, சிந்தி சிதறி முண்டியடித்து வாங்கும் மக்களின் இன்றைய நிலையினை,

**"முப்போகம் பயிர் செய்த தமிழன்**

**முண்டியடித்து வாங்கிய**

**ரேசன் அரிசிக்கு**

**சரியாகத்தான்**

**பெயர் வைத்துள்ளான்**

**புழுங்கல் அரிசி !**

**ஆம்**

**புழு 'கல்' 'அரிசி' !" (ப.ஒ.த.வ. ப.47)**

என்ற புதுக்கவிதை சமுதாயத்தை எள்ளி நகைக்கின்றது. நெல் பயிர் செய்து பக்குவப்படுத்தப்பட்டு அரிசியாக வடிவம் பெறுகின்றது. அது சாமானிய மக்களைச் சென்றடையும் பொழுது தரமற்ற தன்மையில் உள்ளது. இதனை, 'பழு' 'கல்' 'அரிசி' என்ற சொல்லாட்சி விளக்கி நிற்கிறது. இதிலிருந்து சமூக அவலங்களை எள்ளல் தன்மையுடன் கவிஞர் சுட்டுவதை உணர முடிகின்றது.

**வரதட்சணைக் கொடுமை:**

காலம் காலமாக இவ்வுலகில் இன்றும் வழக்கில் இருக்கும் பெரிய கொடுமைகளுள் ஒன்று வரதட்சணைக் கொடுமை. இக்கொடுமை மாறாமல் இருப்பதனை,

**"மாமியார் கெல்லாம்**

**மரபுக்கவிதை தான்**

**அதிகம் பிடிக்கிறது**

**சீர் கொண்டு வருவதால்?" (ப.ஒ.த.வ ப.35)**

என்ற புதுக்கவிதை அங்கதச் சுவையுடன் பதிவு செய்கின்றது. பழமையான கவிதை வடிவமான மரபுக்கவிதையின் சீர் அமைப்பு முறையினை, மருமகள் கொண்டு வரும் வரதட்சணைக்கு (சீர்) ஒப்புமையாகக் கவிஞர் பாடியுள்ளார். இக்கருத்தாக்கம் சிரிக்கவும் சிந்திக்கவும் தூண்டுகின்றது எனலாம்.

**வறுமையின் போக்கு :**

வறுமையைப் பாடுபொருளாகச் சங்க இலக்கியங்கள் முதல் இன்றைய இலக்கியங்கள் வரை எடுத்தாண்டுள்ளன. திருவள்ளுவரும்,

**" இன்மையுள் இன்னாதது யாதெனின் இன்மையின்**

**இன்மையே இன்னா தது" (குறள் எண் : 1041)**

என்று வறுமையின் கொடுமையை எடுத்துக்காட்டுகிறார். வறுமையானது மிகவும் கொடுமையான ஒன்று. அவ்வறுமையிலும் கொடுமை இளமையில் ஏற்படும் வறுமை ஆகும். இதனை ஔவையார்,

**" கொடிது கொடிது வறுமை கொடிது**

**அதனினும் கொடிது**

**இளமையில் வறுமை கொடிது'' (சிவ.கன்னியப்பன், தனிப்பாடல் திரட்டு,ப.153)**

எனும் பாடல் அடிகளின் மூலம் அறியமுடிகிறது.

நன் நிமித்தமாக விருந்தினரின் வருகையினைப் பதிவு செய்யும் காக்கையின் ஓசையானது எல்லோருக்கும் ஓரே மாதிரியான மனநிலையினைக் கொடுப்பது இல்லை. விருந்தினர் வருகை தந்தால் அவர்களுக்குப் பரிமாறுவதற்குக் கூட உணவு இல்லை என்பதனை,

**''எந்த விருந்தாளிக்கும்**

**கத்தாதே காக்கையே**

**எங்களுக்கே உணவில்லை'' (ப.ஒ.த.வ. ப.40)**

என்ற புதுக்கவிதை சுட்டுகின்றது. அடித்தட்டு மக்களின் வாழ்க்கைப் போராட்டத்தினையும் வறுமை நிலையினையும் கவிஞர் கவிதைகளில் பதிவு செய்துள்ள விதம் பாராட்டுக்குரியதாய் அமைந்துள்ளது.

அழும் குழந்தைக்கு நிலவினைக் காட்டி சோறு ஊட்டும் நிகழ்வானது பலருக்கு இனிமையானதாக இருந்தாலும், உணவு இல்லாமல் கஷ்டப்படும் குடும்பத்தில் வாழும் தாயின் மனநிலை எவ்வாறு இருக்கும் என்பதனை,

**''இன்று வேண்டாம்**

**நாளை வா நிலா**

**ஊட்டுவதற்குச் சோறில்லை'' (ப.ஒ.த.வ. ப.41)**

என்ற புதுக்கவிதை படம்பிடித்துச் சுட்டுகின்றது. மகிழ்ச்சியும் ஆச்சரியமும் தரக்கூடிய நிலவானது அவளுக்கு சோகத்தினையும் வருத்தத்தினையும் தரக்கூடியதாக அமைகின்றது என்பதனை இக்கவிதையின் வாயிலாக அறியமுடிகின்றது.

**முடிவுரை**

கவிஞர் நா.முத்துக்குமார் சமூக அவலங்களை மனித வாழ்வியல் அனுபவங்களின் வாயிலாகச் சுட்டியுள்ளார் என்பதை அறிய முடிகின்றது. தன் கவிதைகளில் எள்ளல், அங்கதம் போன்ற இலக்கிய உத்திகளைக் கையாண்டு இன்றைய கல்விநிலை, நியாய விலைக்கடை நிகழ்வுகள், வறுமை நிலை போன்ற வாழ்வியல் சூழல்களைப் பட்டியலிடுகின்றார். இப்பதிவுகள் சிரிக்கவும், சிந்திக்கவும் வைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. எண்ணப் பதிவாகிய எழுத்துக்களை எதார்த்த நிகழ்வுகள் மூலம் கவிதையாகப் பதிவு செய்திருப்பது கவிஞரின் ஆளுமைத் திறனுக்குச் சான்றாகும். இதிலிருந்து கவிதை மனிதனின் வெறும் அனுபவத்தை மட்டும் கூறவில்லை என்பதை ஆய்ந்து அறியமுடிகிறது.

**துணைநூற் பட்டியல்**

1. நா. முத்துக்குமார், பச்சையப்பனிலிருந்து ஒரு தமிழ் வணக்கம், டிஸ்கவரி புக் பேலஸ், முதல் பதிப்பு - 2020, சென்னை
2. தனிப்பாடல் திரட்டு (விளக்கத்துடன்), சிவ.கன்னியப்பன், பாரி நிலையம், முதல் பதிப்பு, சென்னை.
3. பரிமேலழகர் (உ.ஆ), திருக்குறள் மூலமும் உரையும், அருணா வெளியீடு, சென்னை.